**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்**

**முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், சீர்காழி

2026 ஆம் ஆண்டு ஜுன் 08 ஆம் நாள் திங்கள்கிழமை

**CMP.No.712/2026**

**CNR.No.TNMY08-001755-2026**

முனியாண்டி
த/பெ. தங்கராசு,
கீழரத வீதி, வைத்தீஸ்வரன்கோயில்,
சீர்காழிதாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் ..... மனுதாரர்/ வழக்கு சொத்தின் உரிமையாளர்

*/எதிராக/*

அரசுக்காக:-
காவல் உதவி ஆய்வாளர்,
**திருவெண்காடு காவல் நிலையம்,**
குற்ற எண்.115/2023
U/s. 420 IPC .....எதிர்மனுதாரர்/ குற்றமுறையிடுபவர்

இம்மனு 02.06.2026 தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இம்மனுவின் மீதான விசாரணையானது 08.06.2026ம் தேதியன்று இறுதியாக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் திரு. J. நூர்முகமது அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்குரைஞர் நிலை-2 திருமதி.K.நிவேதா அவர்கள் எழுத்து மூலமாக எடுத்துரைத்த வாதுரைகளையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் இம்மனுவில் வழங்கிடும்

***உத்தரவு***

இம்மனு மனுதாரரால் பிரிவுU/s. 497 & 503 BNSS ன் கீழ் வழக்கு சொத்தை திரும்பப்பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட செங்கற்களின் உடைமையாளர் மற்றும் மேற்படி குற்ற வழக்கின் புகார்தாரர் ஆவார். மனுதாரர் மங்கைமடத்தில் உள்ள S.K.B சேம்பரில் மேலாளராக பணியாற்றி வருகிறார். கடந்த 26.05.2023 அன்று எதிரி சக்திகுமார் அவரை போன் மூலம் தொடர்பு கொண்டு ஜெயங்கொண்டம் தாலுக்கா, உட்கோட்டை கிராமத்தில் வசிக்கும் மணிவண்ணன் என்பவருக்கு 10,000 செங்கல் அனுப்பி வைக்கும்படியும், செங்கல்லை இறக்கிய பின்பு பணத்தை பெற்றுக்கொள்ளலாம் என்று கூறியுள்ளார். அதன் அடிப்படையில் சேம்பரிலிருந்து கடந்த 27.05.2023 அன்று செங்கல்

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.06.08 16:49:58 +0530

மணிவண்ணனிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர் அதற்குரிய பணத்தை தராமல் அதனை தான் சக்திகுமாரிடம் கொடுத்துவிட்டதாக கூறியுள்ளார். மேற்படி சக்திகுமாரை பின்பு தொடர்புகொள்ள முடியாத காரணத்தால் அவரது மோசடி செயலுக்கு எதிராக புகார்தாரர் புகார் கொடுத்து, அது சம்பந்தமாக திருவெண்காடு காவல் நிலையத்தில் குற்ற எண்.115/2023ல் சட்டப்பிரிவு 420 IPCன் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி செங்கற்கள் கைப்பற்றப்பட்டு காவல்நிலையம் வசம் உள்ளது. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட செங்கற்களை கட்டுமான பணிகளுக்கு மட்டுமே மனுதாரர் பயன்படுத்தி வருவதாகவும், அரசால் தடைசெய்யப்பட்ட அரசுக்கு எதிரான காரியங்களுக்கு செங்கற்களை பயன்படுத்தியது கிடையாது என்றும், மேற்படி செங்கள் காவல் நிலையத்தில் திறந்தவெளியில் இருந்து வருவதால் மழைக்காலங்களிலும், வெயில் காலங்களிலும் வீணாகிபோய்விடும் என்றும், மேற்படி வழக்குச்சொத்தான செங்கற்களை இடைக்காலமாக தனது வசம் ஒப்படைக்கக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். அவ்வாறு ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகவும் ஒப்புக்கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அரசு தரப்பிலும், சம்மந்தப்பட்ட காவல் துறை தரப்பிலும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டதில், திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.115/2023, சட்டப்பிரிவு 420 IPC என்னும் வழக்கின் வழக்கு சொத்தான மேற்படி செங்கற்களை மனுதாரரிடம் ஒப்படைத்தால் அதனை மறைத்துவிடுவார் என்பதால் உரிமையாளரிடம் தடயப்பொருளை ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இந்த வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்யும்போது இந்த வழக்கானது கடந்த 26.05.2023 அன்று புகார்தாரரை எதிரி தொடர்பு கொண்டு 10,000 செங்கற்களை அனுப்பி வைக்கச்சொல்லி அதனை பெற்றுக் கொண்ட பின்னிட்டு அதற்குரிய தொகையை கொடுக்காமல் ஏமாற்றியது சம்பந்தப்பட்ட வழக்காகும். மேற்படி குற்ற எண்ணில் செங்கற்கள் கைப்பற்றப்பட்டு வழக்கு சொத்து எண் **CP NO.76/2026** பதிவு செய்யப்பட்டு திருவெண்காடு காவல் நிலையம் வசம் உள்ளது தெரியவருகிறது. மேற்படி சங்கதி மற்றும் போலிசார் அந்த செங்கற்களின் மீது மனுதாரருக்கு உண்டான உரிமையை மறுக்காதது ஆகியவற்றை கருத்தல் கொண்டு, இந்த செங்கற்களை இடைக்கால பொறுப்பில் பெறுவதற்கு மனுதாரர் தகுதியானவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி செங்கற்கள் கைப்பற்றப்பட்டு வழக்குச்சொத்து எண் பெறப்பட்டுவிட்ட நிலையில், நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் இருந்தால் அவை சேதமடைந்து வீணாகக்கூடும் என்பதையும் கருத்தில் கொண்டும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் 'Sunderbhal Ambalal Desai vs State Of Gujarat' ( SLP Cr.l 2745 of 2022 dated 01.10.2002) என்னும் வழக்கின் முன் தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.06.08 16:50:06 +0530

வழக்கு சொத்தான பத்தாயிரம் செங்கற்களை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் பின்வரும் நிபந்தனைகள் அடிப்படையில் ஒப்படைக்கப்பட வேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனுவை அனுமதித்து உத்திரவிடுகிறது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரர் மற்றும் 2 நபர்கள் பிணையதாரர்களுடன் தலா மொத்தம் ரூ.50,000/– ற்கான பிணைபத்திரம் எழுதித்தர வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. மேற்படி நபர்களின் செல்வ நிலையை காண்பிக்க உரிய வரி ரசீது/ சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும்.

2. இந்த உத்தரவினை காண்பித்து, மனுதாரர் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்தை நான்கு கோணங்களிலும் புகைப்படம் எடுத்து அதனை புகைப்படம் மற்றும் Pendrive ல் பதிவு செய்து, அவற்றை U/s. 63 BNSS ன் கீழான சான்றிதலோடு ஒப்படைக்க வேண்டும்.

3. வழக்கு சொத்தை வழக்கு முடியும் வரை விற்கவோ, அடகு வைக்கவோ, உருமாற்றம் செய்யவோ மற்றும் சட்டத்திற்கு புறம்பான எவ்வித செயல்களுக்குமோ ஈடுபடுத்தக்கூடாது.

4. மனுதாரர் வழக்கு விசாரணையின்போது வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

5. மனுதாரர் ரூ.50,000–க்கு பஞ்சனாமா எழுதிக்கொடுக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜுன் மாதம் 08ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இந்த உத்தரவு என்னால் பகரப்பட்டது.

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.06.08 16:50:11 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சீர்காழி.**